பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 07 2025 **TUESDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சரக்கு மற்றும் சேவை வரி நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பரமக்குடி – ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையை ஆயிரத்து 853 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்குவழிச் சாலையாக மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- தமிழகத்தில் பட்டாசு ஆலைகளில் விபத்துகளை தடுக்க, மாவட்ட அளவில் சிறப்புக் குழுக்களை மாநில அரசு அமைக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

- தமிழகத்தில், 7 ஆயிரத்து 212 மறுகட்டுமான அடுக்குமாடி குடியிருப்புகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

- சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Paavanii Paathak, Smriti Bhasin ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு வந்தபின் எட்டு ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி தொடங்கப்பட்ட நாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், வரி தொடர்பான புகார்கள் கணிசமாக குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வர்த்தகத்தை தங்கு தடையின்றி மேற்கொள்ளும் வகையில், இந்த வரி கட்டமைப்பு அமைந்துள்ளதாகவும், குறிப்பாக சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கு வலிமைமிக்க உந்து சக்தியாக சரக்கு மற்றும் சேவை வரி திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜிஎஸ்டி-யில் மாநிலங்களுக்கும் சம உரிமை அளிக்கப்பட்டுள்ளதால், உண்மையான கூட்டுறவு சுயாட்சி நிலைநாட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக சந்தையை ஒருங்கிணைக்கும் அமைப்பாக சரக்கு மற்றும் சேவை வரி உள்ளது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பரமக்குடி – ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையை ஆயிரத்து 853 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்குவழிச் சாலையாக மாற்றும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை செய்தியாளர்களிடம் விளக்கிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 46 புள்ளி ஏழு கிலோமீட்டர் தொலைவுள்ள இந்த சாலையை அகலப்படுத்துவதன்மூலம் ஆன்மிகம் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிகளில் சுற்றுலா மேம்படுவதுடன், தடையற்ற போக்குவரத்து இணைப்பு வசதி கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், ஒரு லட்சம் கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக கொண்டு ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதுமை கண்டுபிடிப்பு திட்டத்தை செயல்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

தனியார் பட்டாசு ஆலைகளில் முறையான ஆய்வு மேற்கொண்டு விபத்துகளை தடுக்க, மாவட்ட அளவிலான சிறப்புக் குழுக்களை நியமிக்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விருதுநகர் மாவட்ட பட்டாசு விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

மாநில அரசின் அக்கறையின்மை காரணமாக, சிவகாசி சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பட்டாசு ஆலைகளில் வெடிவிபத்து ஏற்படுவது தொடர்கதையாகி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டாசு ஆலைகளில் பாதுகாப்பு அம்சங்கள் முறையாக கடைபிடிக்கப்படுகிறதா என்பதை மாநில அரசு கண்காணிப்பதோடு, உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தோரின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

சாத்தூர் பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீர் படிப்படியாக அனைத்து கடைமடைப் பகுதிகளுக்கும் சென்றடையும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேட்டூர் அணையிலிருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்துவிடப்படுவதால், விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை என்றார்.

அனைத்துப்பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டியப்பனூர் அணையில் அளவுக்கு அதிகமாக உள்ள மண்ணை அகற்றி அணையை பராமரிக்க மாநில அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் திரு துரைமுருகன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மறு கட்டுமானத் திட்டத்தின்கீழ், கட்டப்பட்டுவரும் 7 ஆயிரத்து 212 அடுக்குமாடி குடியிருப்புகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று மாநில சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று திட்டப்பணிகளை ஆய்வு செய்த அமைச்சர், 30 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளின் தரத்தை வல்லுநர் குழு மூலம் ஆய்வு செய்து, புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சென்னையில் 17 திட்டப்பகுதிகளிலும், திருநெல்வேலி, கரூர், மதுரை மாவட்டங்களில் மூன்று திட்டப்பகுதிகளிலும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுவருவதாக திரு தா மோ அன்பரசன் கூறினார்.

<<<<<>>>>>

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல்நிலையத்தில் இளைஞர் அஜித்குமார் மரணம் அடைந்த சம்பவம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் விசாரணை நடத்த வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், இளைஞரிடம் விசாரணை நடத்தியதில் நடைமுறைகள் மீறப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்றபின்னர், இதுவரை 24 பேர் காவல்நிலைய விசாரணையின்போது மரணமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சாட்சியங்களை கலைக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சாட்டியுள்ள திரு நயினார் நாகேந்திரன், இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்டக்குழு அமைத்து சுதந்திரமான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ், 7-ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஈரோடு மாவட்டத்தில் நாளை தொடங்கி, இம்மாத இறுதிவரை நடைபெறவுள்ளது.

கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*Sound Byte - மூர்த்தி – 30 Sec.)*

<<<<<>>>>>

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த இரு தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

*(Voice Byte - செந்தாமரை கண்ணன் - 20 Sec.)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவாரூரில், பருத்திக்கு உரிய விலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளாத மாநில அரசை கண்டித்து, அஇஅதிமுக சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

--------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகராட்சியில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திடக்கழிவு மேலாண்மை மையத்தில் இன்று பணிகள் தொடங்கியது.

---------------

கொடைக்கானல் மலைப்பகுதியில் இயற்கை மற்றும் கனிம வளங்களை பாதுகாக்கும் விதமாக கனரக வாகனங்களை இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக கோட்டாட்சியர் திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

-----------------

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வருவாய்த்துறை தினம், அத்துறையின் அனைத்து நிலை அலுவலர்கள் சார்பில் இன்று கடைபிடிக்கப்பட்டது.

----------

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட ஒலிமுகமதுபேட்டையில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் அரசு அருங்காட்சியகத்தின் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

---------------

தருமபுரி மாவட்டம் கும்பாரஹள்ளி சோதனைச்சாவடியில், கார்களில் கடத்தி வரப்பட்ட ஏழு லட்சம் ரூபாய் மதிப்பிலான மூன்று டன் போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்

*<<<<<>>>>>*

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Paavanii Paathak காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் Hillcrest-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர், 6-4, 6-2 என்ற செட் கணக்கில், சுவிட்சர்லாந்தின் Natalia Fehr -ஐ வென்றார்.

மற்றொரு ஒற்றையர் பிரிவில் ,இந்தியாவின் Smriti Bhasin, 6-2, 6-3 என்ற செட் கணக்கில், தென்னாப்பிரிக்காவின் 'Tayla Wilmot -வை வென்றார்.

--------------

மலேசிய ஜூனியர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் 'Nithin Raghavendar ' அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில், அவர், 21-16, 21-15, என்ற செட் கணக்கில், மலேசியாவின் 'Muhammad Amzar Hakimi -ஐ வென்றார்.

*<<<<<END>>>>>*